1975 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, பல்லடம் ஏரியாவில் பைலட் செண்டர் இருக்கிறது. இந்தக் கேள்வி, கக்கூன் மார்க்கெட் ஏற்பாடு செய்வதைப் பற்றிக் கேட்கப்பட்டிருக்கிறது. கோவை மாவட்டத்தில் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது, தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுக்க இருக்கிறார்கள்.

Incentives for raising third crop.

*673 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any incentive was given to the ryots in Thanjavur district during 1975 for the raising of third paddy crop ; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை@ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், மூன்றாம்போக விளைச்சலுக்கு எல்லா உதவிகளும் செய்யப்பட்டிருக்கிறது, நெல் உற்பத்தி செய்ய. ஆனால் இந்த நெல்லை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக யாரும் நிலக்கடலை போட்டிருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் செலவு செய்வது வீண்தானே? அவர்களுக்குக் கொடுத்த சலுகைகள் வாபஸ் வாங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஏற்கெனவே நான் விடையில் சொல்லியபடி மூன்றாவது போகத்திற்கு நெல்லுக்கு மட்டும் இந்த உதவி அளிக்கப்படுகிறது. நெல்லைத் தவிர வேறு பயிர்களுக்கு சலுகைகளைக் காட்டியிருந்தால் அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வருமானால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த உதவித் தொகை வழங்குவதில் காலதாமதம் காட்டப்படுகிறது என்று விவசாயிகள் மத்தியில் சொல்லப்படுகிறது. இதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, விடையில் உதவித் தொகையைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த பட்ஜெட் உரையிலேயே மூன்றாவது போகத்திற்கு லெவியிலிருந்து விதிவிலக்கு வரும் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது மேற்கொண்டு சில வசதிகள்

@ 109-110ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நடப்பு ஆண்டிலேயே அம் மாதிரி மூன்றாவது போகம் எந்தெந்த மாவட்டங்களிலே வருவதாக இருக்கிறது, அப்படி ஏதாவது மனு கொடுத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இது தஞ்சை மாவட்டத்திலே மட்டும் அல்லாமல் எந்த மாவட்டத்திலேயும் இந்த மூன்றாவது போகம் பயிரிடப்படுமானால் அதற்கு இந்தச் சலுகை உண்டு என்று சொல்லி இருக்கிறோம். வேறு எந்தெந்த இடத்தில் என்ற புள்ளி விவரம் இப்பொழுது என் கையில் இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மூன்றாவது போகம் நெல்லைச் சாகுபடி செய்ய இயலாது. அப்படிச் சாகுபடி செய்தால் வயலில் கருகிவிடுகிறது. ஆகவே, புஞ்சை தானியங்கள் பயிரிடுவதற்கும் இந்தச் சலுகைகள் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, தற்பொழுது அரசால் அறிவிக்கப்பட்ட இந்தச் சலுகைகள் எல்லாம் நெல்லை மூன்றாவது போகமாகச் சாகுபடி செய்வதற்கு. மூன்றாவது போகம் தஞ்சை மாவட்டத்திலே விளைவிக்க முடியாது என்று சொல்லப்படுவதை ஒரு போதும் நான் ஒப்புக்கொண்டதில்லை. எங்கே கிணறுகள், குழாய்க் கிணறுகள் இருந்து நாற்றங்கால் சீக்கிரம் போட முடியும் என்ற நிலைமை இருக்கிறதோ அங்கே உருவாக்க முடியும் என்பது என் கருத்து. தஞ்சை மாவட்டத்திலே சில இடங்களிலேகூட விளைவித்திருக்கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே. தஞ்சை மாவட்டத்தில் மூன்றும் போகம் நெல் சாகுபடி செய்வதற்காக அரசு ஊக்க உதவித் தொகையை அளிப்பது வரவேற்கத்தக்கது. இருந்தாலும் தஞ்சை மாவட்டத்தில் குத்தகைக்கு பயிரிடக்கூடியவர்கள் பெரும்பான்மையோர் தருமபுரம், திருவாடுதுறை ஆதீனங்களுக்கு கீழேதான் பயிர் செய்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு வடிமுனைக்குழாய்க் கிணறுகளை அமைத்துத் தந்து, அவர்கள் நெல்லினை உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா ? அதற்காக ஏதாவது புதிய திட்டத்தினை உருவாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவசாயிகளுக்கு வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைப்பது பற்றிய செயல் முறையினைப் பற்றி கேட்பதென்றால் கூட்டுறவுத் துறையில் கேட்க வேண்டும்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : மூன்றாவது போகமாகப் பயிர் செய்யக் கூடிய எச்.பி. 5 என்ற கம்புப் பயிர் நாட்டிலே விளைவித்து அது விளையாமல் பொய்ப்பித்துப் போய் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதிலே என்ன நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வினா நெல்லுக்கு அளிக்கப்படுகின்ற சலுகை பற்றியது. நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் என்ற வகையில் அங்கே சென்றும் அந்த சலுகை பாயக்கூடும். எனினும் எச்.பி. 3 கம்பைப் பற்றி கேட்கிறார்கள் ; அதைப் பற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தமிழ்நாடு அரசு நெல்லை மூன்றும் போகம் சாகுபடி செய்வதற்கு ஊக்கம் அளிப்பது போல் புஞ்சை உணவு தானியங்களான கேழ்வரகு, சோளம் போன்றவற்றைப் பயிரிடுவதற்கு ஊக்கம் அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இதை அரசு ஆராய்ந்து ஆவன செய்யும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

Fertiliser Fund.

*674 *Q.*—THIRU N. K. PALANISAMY : THIRU KA. VEZHAVENDAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to create a Fertiliser Fund out of the income accruing from the sale of fertilisers ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பேரவைமுன் விவர அறிக்கையொன்று @வைக்கப்பட்டுள்ளது.

Allotment of Fertilisers.

*675 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the quantity of fertilisers proposed to be allotted to Tamil Nadu during 1974–75?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பேரவைமுன் விவர அறிக்கையொன்று £ வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இந்த உர நிதி இதுவரை எவ்வளவு சேர்ந்திருக்கிறது ? சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு விவசாயம் செய்யும் இடங்களிலே இருந்து கரும்பு வருவதற்கு சர்க்கரை ஆலை

@ 110-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.
£ 111-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடபட்டுள்ளது.